## "மனிதனது கடமையும் விலங்கினங்களை பாதுகாக்க வேண்டிய தேவையும்' - ஓர் மெய்யியல் பகுப்பாய்வு. இலங்கையின் அண்மைக்கால போக்கினை ஆதாரமாகக் கொண்ட ஆய்வு

**Supervisor**
*Mr. N. Sivakaran,*
*Lecturer,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

**Researcher**
*Miss. M. Mayoor,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

### ஆய்வுச் சுருக்கம்

சமகால ஒழுக்க மெய்யியலில் மனிதரல்லாத விலங்குகளது உரிமைகள் மற்றும் அதன் நலன்கள் தொடர்பான கருத்துக்கள், செயற்பாடுகள் முதன்மை பெற்று காணப்படுகின்றன. இத்தகைய சிந்தனைகளும் செயற்பாடுகளும் அண்மைக் காலங்களில் மேலைத்தேய நாடுகளில் அதிகமாக வலியுறுத்தப்படுவதை காணமுடிகிறது. குறிப்பாக பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல நூறு அமைப்புக்கள் உருவாகப்பட்டு மனிதரல்லாத விலங்குகளது உரிமைகள், அதன் நலன்களை பேணுவதில் அக்கறை செலுத்தி வருகின்றன. எனினும் கீழைத்தேய நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளிலும் தற்காலங்களில் இலங்கையிலும் விலங்குகளைப் பாதுகாப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட வேண்டிய தேவை அவசியமாக உணரப்பட்டு வருவதனைக் காண முடிகிறது. அந்த வகையில் இவ் ஆய்வுக் கட்டுரையானது இயற்க்கைச் சூழலில் உயிரினங்களினை பாதுகாக்க மனிதனானவன் எவ்வாறு செயல்பட வேண்டும்? மனிதர்கள் ஏன் விலங்ககளை பாதுகாக்க வேண்டும்? அவற்றினை பாதுகாப்பதற்காக அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் என்ன? இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுக்கவியல் அடிப்படையில் மேற்க்கொள்ளப்படுகின்றனவா? விலங்குகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் என்ன? அவை எவ்வளவு தூரம் நடைமுறை சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளன? போன்ற விடயங்களை உள்ளடக்கிய வகையில் இவ் ஆய்வுக் கட்டுரையானது அமைந்து காணப்படுகின்றது. மகாத்மகாந்தி *'The Greatness of a nation and its moral progress can be judged by the way animals are treated in a nation'* எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு மனிதன் தனது கடமைகளில் ஒன்றான விலங்குகளைப் பாதுகாத்தல் பணியை சரிவர நிறை வேற்றுதல் வேண்டும் இன்றைய மானிடப் பேராசை யுகத்தில் மனித இனம் காட்டி வரும் கட்டற்ற வளர்ச்சி என்ற கொடூரமும் பொருளாதார மேம்பாட்டிற்காக யார் குடியைக் கெடுத்தாலும் தவறில்லையென்னும் நுகர்வு கலாசாரமும் கடந்த 30 ஆண்டுகளில் வரலாறு காணாத அழிவை இயற்கை வளங்களுக்கும் பல்லுயிர் வளத்திற்கும் ஏற்படுத்தி வருகின்றன. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'. என்று உலகில் தோன்றிய அனைத்து உயிர்களையும் ஒரே தளத்தில் வைத்தது தமிழ் மரபு. அனைத்து உயிர்களும் இன்புற்று வாழ்வதற்கான உரிமை உண்டு என்பது நமது சிந்தனை மரபு. மனிதன் தன்னைத்தான் பேணிக்கொள்வது மட்டும் அவனது கடமையல்ல. இப் பூமியையும் அதில் ஏனைய ஜீவராசிகளையும் பாதுகாக்க வேண்டியதும் அவனது கடமையாகும். இல்லாவிடில் மனித இருப்புக்கே அச்சுறுத்தலாகிவிடும். இயற்கையானது தன்னியல்பான முறையில் ஓர் சமநிலையை பேணி வருகின்றது. மனிதனது செயற்பாடுகள் இச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் தான் இன்று பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இயற்கையின் சமநிலையில் விலங்குகளின் இருப்பும் அவற்றின் இயல்பான செயற்பாடுகளும் இன்றியமையாதது. இந்நிலையில் விலங்குகளை அளவுக்கு அதிகமாக கொல்வதும், அவற்றின் வாழ் இடங்களை அழிப்பதும் இயற்கையில் பாரிய விபரீதமான மாற்றத்தை ஏற்படுத்தும். எனவே பிற உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையை கொண்டவனாக மனிதன் இருக்கின்றான். மனிதன் இன்று தான் சுயநலனிற்காக பூமியில் தான்மட்டும் நல்ல

வண்ணம் வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய எண்ணத்தில் பிற விலங்குகளை தனது அடிமைகளாகக் கருதி செயற்படுகிறான். மனிதர்களினது பல்வேறு தேவைகளிற்குள்ளும் விலங்குகளின் உரிமைகள் மற்றும் நலன்கள் அகப்பட்டு நசிந்து போய்விடுகின்றன. இன்று எமது சமூகங்களில் மனிதரல்லாத விலங்குகளை மனிதர்கள் கையாளுகின்ற நிலைமை மிகவும் மோசமானதாக இருக்கின்றது. மனிதர்கள் தமது உணவிற்காக, தமது பொழுது போக்கிற்காக, தமது தொழில்களுக்காக ஆய்வு கூடச் சோதனைகளுக்காக, மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் வேள்விக்காகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் மனிதரல்லாத விலங்குகளை துன்புறுத்தியும் கொன்றும் வருவதன் மூலம் மனிதரல்லாத விலங்குகளிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றனர். மனிதரல்லாத பிற விலங்குகளுக்கும் உயிருள்ளது அவற்றிற்கும் உணர்வுகள் உள்ளது அவையும் மகிழ்வினையும் துன்பத்தினையும் அனுபவிக்கக் கூடிய தன்மை கொண்டவை அவையும் இயற்கையாக மரணம் அடையும் வரை வாழ விரும்புகின்றன என்ற விடயங்களை பெரும்பாலான மனிதர்கள் கருத்தில் கொள்வதில்லை. இந் நிலைமை உலகில் பல்வேறு சமூகங்களிலும் பெரும் பிரச்சினையாக இன்று உருவெடுத்து நிற்கின்றது.

தமிழர் பண்பாட்டின் தலை சிறந்த பாரம்பரியங்களாக இருந்து வருகின்ற பிறர்குறித்த அன்பும் அக்கறை காட்டல் கொல்லாமை எமது கடமைகயை ஒழுக்கத்துடன் நிறைவேற்றல் போன்ற எமக்கென விதிக்கப்பட்ட கடமைகளை ஒழுக்கங்களையும் சரிவர நிறைவேற்றாது ஒழுக்க மீறல்களை மேற்கொள்கின்றோம். இலங்கையில் விலங்குகளுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளையும் வேதனைகளையும் குறைப்பதற்கு அரசினது செயற்பாடுகளும் சட்டங்களும் இன்னமும் முக்கியமான பங்களிப்பு எதனையும் நல்கிவிடவில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் பல்வேறு தரப்பினர்களால் முன்வைக்கப்படுகின்றன. இந்தவகையில் விலங்குகளின் உரிமைகள் தொடர்பாகவும், அதன் நலன்களை பேணுதல் தொடர்பாகவும் இலங்கை கூடிய அக்கறை செலுத்தப்பட வேண்டிய அவசியத்தினை வலியுறுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

இக்கட்டுரையானது வரலாற்று ஆய்வு முறை, ஒப்பீட்டு ஆய்வு முறை, விமர்சன முறை, பகுப்பாய்வு முறை என்பவற்றின் துணை கொண்டு வடிவமைக்கப்படுருப்பதுடன் இக் கட்டுரைக்கு வேண்டிய தரவுகளானவை. 1ஆம் நிலைத் தரவுகள் :- விலங்குகளின் நலன் குறித்த சமூக ஆர்வலர்களுடனான நேர்காணல். 2ஆம் நிலைத்தரவுகள் - நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய தளங்கள் போன்றவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**Key words:** விலங்குகளது உரிமைகள், மனிதனது ஒழுக்கம், மனிதனது கடமை விலங்குகளது பாதுகாப்பு